# மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் திங்கட்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாசி திங்கள் 27 ஆம் நாள்

**முதலேற்பு வழக்கு எண்.21/2019–ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.06/2025**

**1. V. இராஜேஸ்வரி**
**2. S. லலிதா**
**3. S. தினகரன் ... மனுதாரர்கள்/03 முதல் 5 பிரதிவாதிகள்.**

**–எதிர்–**

**1. A. சுப்ரமணியன் ... 01–ஆம் எதிர்மனுதாரர்/வாதி.**
**2. P. பழனியப்பன் ... 02–ஆம் எதிர்மனுதாரர்/01–ஆம் பிரதிவாதி.**

இந்த மனு இன்று (13.10.2025) இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. D.இராஜசேகரன்** அவர்கள் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

## ஆணையுரை

இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துபோன 02-ஆம் பிரதிவாதி சேகரின் 1/4 பாகத்திற்கு கூடுதல் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரி அவருடைய வாரிசுகளான 03 முதல் 05 வரையிலான பிரதிவாதிகள் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளனர்.

III rd ADJ Court, Salem

## மனுவின் சுருக்கம்

01. மனுதாரர்கள் முதலேற்பு வழக்கில் 03 முதல் 05 வரையிலான பிரதிவாதிகள் ஆவர். முதலேற்பு வழக்கு 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினைக்காக 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதிக்கு எதிராகவும் சேகர் என்பவருக்கு எதிராகவும் பாகப்பிரிவினை கோரி தொடுக் -கப்பட்டது. வழக்குரைபடி 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதிக்கும் 02-ஆம் எதிர்மனுதாரர்/01-ஆம் பிரதிவாதிக்கும் 3/4 பாகமும் 02-ஆம் பிரதிவாதி சேகருக்கு 1/4 பாகமும் உரிமையுள்ளது. அவ்வாறே முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

02. வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 02-ஆம் பிரதிவாதி சேகர் இறந்துவிட்டார். அவருடைய சட்டமுறை சார்பாற்றுனராக மனுதாரர்-கள் 03 முதல் 05 வரையிலான பிரதிவாதிகள் இந்த வழக்கில் தரப்பினாக சேர்க்கப்பட்டனர்.

03. நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை அளவிட வந்தபோது 01-ஆம் எதிர்மனுதாரர்/வாதிக்கு 1-1/2 பாகத்தையும் 02-ஆம் எதிர்மனு தாரர்/01-ஆம் பிரதிவாதிக்கு 1-1/2 பாகத்தையும் ஒதுக்கியபின் எஞ்சிய 1/4 பாகத்தை மனுதாரர்கள்/01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளுக்கு ஒதுக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை வைத்தனர். 02-ஆம் பிரதிவாதி சேகரின் 1/4 பாகத்தில் உரிமை முதல்நிலைத் தீர்ப்பாணையில் விளம்புகை செய்யப்படாததால் கூடுதல் முதல்நிலைத் தீர்ப்பாணை பெற்றால்தான் மனுதாரர்களுக்கு பாகம் ஒதுக்க முடியும் என்று நீதிமன்ற ஆணையர் கூறினார். பல்முனை வழக்குகளை தவிர்ப்பதற்காக 02-ஆம் பிரதிவாதி சேகருக்கு சேர வேண்டிய 1/4 பாகத்தைப் பொறுத்து மனுதாரர்கள்/03 முதல்

05 வரையிலான பிரதிவாதிகளின் நலச்சார்பாக கூடுதல் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்து ஆணையிட வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

04. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

## தீர்முடிவு

05. வழக்கு கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. ஒரு பாகப்பிரிவினை வழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட முதல்நிலைத் தீர்ப்பாணைகள் பிறப்பிக்கப் படலாம் என்பது நன்கு நிறுவப்பட்ட முன்தீர்ப்பு நெறியாகும்.

06. மனுதாரர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை சட்ட முறையானது. ஆகையால், மனுதாரர்கள்/03 முதல் 05 எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளபடி இறந்துபோன 02-ஆம் பிரதிவாதியின் 1/4 பாகத்தைப் பொறுத்து மனு-தாரர்கள் 03 முதல் 05 வரையிலான பிரதிவாதிகளின் நலச்சார்பாக கூடுதல் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்து இம் மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

## இறுதி முடிவு

07. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. வழக்குச் சொத்தில் 1/4 பாகத்திற்கு பாகப்பிரிவினை பெற 02-ஆம் பிரதிவாதி சேகரின் வாரிசுகளான மனுதாரர்கள்/03 முதல் 05 வரையிலான பிரதிவாதிகளுக்கு உரிமையுள்ளது என கூடுதல் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பித்து இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது. அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

III rd ADJ Court, Salem

இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்)வே.புகழேந்தி
மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
சேலம்.

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem

உண்மை/வரைவு ஆணையுரை
வ.வி.எண்.06/2025 in மு.வ.எண்.21/2019
நாள் 13.10.2025